# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 171/மா/2023**

**நாள் : 11 . 07.2023**

திரு.B.கோவிந்தசாமி,
திருப்பூர் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர். – எதிர்மனுதாரர்

திருப்பூர், அண்ணாநகர், PRG திருமண மண்டபம், கதவு எண்.8/3762, 8/3763 என்கின்ற முகவரியில் வசிக்கும் திரு. B. கோவிந்தசாமி என்பவரின் 25.05.2023 நாளிட்ட மனு, 26.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 171/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருப்பூர், அண்ணாநகர், PRG திருமண மண்டபம், கதவு எண்.8/3762, 8/3763 என்கின்ற முகவரியில் வசிக்கும் திரு.B.கோவிந்தசாமி என்பவர் தனது 25.05.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

மனுதாரர் ஆகிய நான் மேற்கண்ட முகவரியில் வசித்து PRG மண்டபத்தை நடத்தி வருகிறேன். திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு தாலுக்கா, நெருப்பெரிச்சல் கிராமம், சர்வே எண்.90B/1 ஆகும். இவ்விடம் சம்மந்தமாக எனக்கும், குமாரசாமி மகன் சிவசுப்பிரமணியம் என்பவருக்கும் திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 199/2022 நடந்து வருகிறது.

இந்நிலையில் முறைகேடாக கீழ்க்கண்ட காலிமனை வரி (vacant land tax ) ஒப்புதல் மாநகராட்சியால் சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

New Assessment No.032/003/906005
Old Assessment No. 032/017/03866
Zone-2, Ward 3, Place Anna Nagar, Property Type-vacant land
Name Sivasubramaniam.

இம்முறைகேடு சம்பந்தமாக உதவி ஆணையர் மற்றும் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு புகார் அளித்தும் எங்கள் புகார் மீது விசாரணை நடத்தாமல் நிராகரிக்கப்பட்டது. ஆகவே இம்மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்பமை சமூகம் அவர்களுக்கு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் முறைகேடாக வழங்கப்பட்ட காலிமனை வரி ஒப்புதலை ரத்து செய்யவும் அல்லது காலிமனை வரிவிதிப்பினை அசல் வழக்கு முடியும் வரை நிறுத்தி வைக்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 13.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

3) திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது 30.06.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" திருப்பூர் அண்ணா நகர் பகுதியில் வசிக்கும் திரு.ப.கோவிந்தசாமி (71) த/பெ. (லேட்) பகவதி கவுண்டர் என்பவர் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு தாலுக்கா, நெருப்பெரிச்சல் கிராமம், சர்வே எண்.90B/1, இடம் சம்மந்தமாக திரு.குமாரசாமி மகன் சிவசுப்பிரமணியம் என்பவருக்கும் தனக்கும் திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.199/22 நிலுவையில் இருக்கும்போது காலிமனை வரிவிதிக்கப்பட்டதில் முறைகேடுகள் நடந்துள்ளதாக தெரிவித்து முறையீட்டு மனு சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள அசல் வழக்கானது திரு.குமாரசாமி மகன் சிவசுப்பிரமணியம் குமாரசாமி என்பவரால் திரு.ப.கோவிந்தசாமி மற்றும் மூன்று நபர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு. மேற்சொன்ன வழக்கு நாளது தேதியில் நிலுவையில் உள்ளது. மேற்சொன்ன வழக்கானது நகராட்சியால் காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ள புல எண்.90B உட்பிரிவு 1 B ல் உள்ள 30 செண்ட் நிலத்திற்கு சொந்தக்காரரான திரு குமாரசாமி மகன் சிவசுப்பிரமணியன் குமாரசாமி என்பவரால் தனக்கு சொந்தமான சொத்தின் அனுபவத்தை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது என்று விளம்புகை கோரி (Declaration suit) தொடரப்பட்ட வழக்காகும். எனவே முறையீட்டுதாரர் குறிப்பிட்டுள்ளது போல், முறையீட்டு தாரரால் எந்தவொரு வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்சொன்ன வழக்கில் திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி தனது 05.08.2022ம் நாளிட்ட தீர்ப்பில் வழக்கெழு வினாகுறித்து விரிவாக விவாதித்து கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"Whether the possession of the Respondent is Lawfull or not? and other aspects can be determined only in the Course of Trial ........... The Order in IA.No. 366/2022 Dt.01.07.2022 is hereby vacated and both the interim applications in I.A.No.349/2022 and I.A. No.366/2022 is hereby dismissed. Provided if the respondents commit any damages or disturbance in future, the petitioner is at liberty to approach this court and shall file necessary application as per due process of Law.

In the result in I.A.No.349/2022 and I.A.No.366/2022 are dismissed with above conditions. No cost"

மேற்கண்டவாறு இடைக்கால மனுக்களை தள்ளுபடி செய்து அசல் வழக்கினை நிலுவையில் வைத்து உத்தரவிட்ட திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பின் அடிப்படையில் அசல் வழக்கு நாளது தேதியில் நிலுவையாக இருந்து வருகிறது என்ற விவரத்தையும் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் கனிவான பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த முறையீட்டின் வழக்கெழு வினாவாக இருக்கக்கூடிய காலிமனை வரிவிதிப்பு மனுதாரரான திரு.குமாரசாமி மகன் சிவசுப்பிரமணியம் குமாரசாமி என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட பத்திரப்பதிவுத்துறை, வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் (அதாவது கிரைய ஆவணம் Registered Document) பட்டா பெயர் மாற்ற உத்திரவு, வில்லங்க சான்று) திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008ல் சொல்லப்பட்டுள்ள சரத்துக்களுக்குட்பட்டு 01.04.2020 முதல் முன் தேதியிட்டு 11.07.2022 அன்று அன்றைய உதவி ஆணையாளர்(பொ) மற்றும் உதவி செயற்பொறியாளர்

திரு சி.கண்ணன், அன்றைய வருவாய் உதவியாளர் திரு.க.திருவேங்கட சுப்ரமணியன், சிறப்பு வருவாய் ஆய்வர் திரு. ஆ.ர.சத்தியசீலன் ஆகியோரின் பரிந்துரையின் அடிப்படையில் காலிமனை வரிவிதிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வரிவிதிப்பு தொடர்பாக மனுதாரரால் பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள, காலிமனை வரிவிதிப்பு செய்ய ஆட்சேபனை தெரிவித்து அனுப்பப்பட்ட கடிதங்கள் சம்பந்தப்பட்ட இருக்கை எழுத்தரால் 14.07.2022 தேதியில்தான் பெற்றுக்கொள்ளப்பட்டு தன்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் முறையீட்டுதாரரின் மூன்றாவது முறையீடான காலிமனை வரியில் காலியிடம் என ஒப்புதல் அளித்துள்ள இடத்தில் எனது வீடு, கோவில் மற்றும் கழிப்பிடங்கள் 20 வருடங்களுக்கு மேலாக உள்ளன. அதற்கு வீட்டுவரி மற்றும் தொழில் வரி ஆகியவை 20 வருடங்களுக்கு மேலாக எனது பெயரில் உள்ளன என முறையீட்டுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள அவரது சொத்து அமைந்துள்ள அமைவிடம் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு தாலுக்கா, நெருப்பெரிச்சல் கிராமம், புதிய சர்வே எண்.90B/1 (பழைய சர்வே எண்.90/B ஆகும்). (ஆதாரம் பத்திர பதிவுத்துறை ஆவண எண்.6694 நாள் 21.06.2022) இந்த சர்வே எண். கொண்ட 5 ஏக்கர் 86 செண்ட் நிலத்தில் மேற்கண்ட கிரைய ஆவணத்தின் மூலம் 30 செண்ட் நிலம் ரங்கசாமி மகன் தேவேந்திரன் என்பவரிடமிருந்து குமாரசாமி மகன் சிவசுப்பிரமணியம் குமாரசாமி என்பவரால் கிரையம் பெறப்பட்ட 30 செண்ட் இடத்திற்கு மட்டுமே ஆவணங்களின் அடிப்படையில் 11.07.2022 அன்று காலிமனை வரிவிதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே வழக்கெழு வினாவில் இருக்கின்ற இரண்டு இடங்களும் ஒரே சர்வே எண்ணில் அருகருகே அமைந்துள்ள வெவ்வேறு இடங்கள். இந்த 30 செண்ட் இடம் வருவாய்துறை ஆவணங்களில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு உட்பிரிவு எண்.90B/1B(Sub division) என பட்டா எண்.5616 நாள் 10.07.2022ல் வகைப்பாடு செய்து வருவாய் வட்டாட்சியரால் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு கிரைய ஆவணத்தின் மூலம் பெறப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்ட 30 செண்ட் இடத்திற்கு காலிமனை வரிவிதிக்கப்பட்டபோது இந்த சொத்து தொடர்பாக எந்தவித நீதிமன்ற தடை ஆணைகளோ, உறுத்து கட்டளைகளோ நிலுவையில் இல்லை என்பது அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது. முறையீட்டுதாரரால் நான்காவது முறையீடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையம் அமைத்து இவ்வழக்கு சொத்தினை ஆய்வு செய்ய உத்தரவிட்டது. ஆணையம் ஆய்வு செய்ததில் சொத்து வழக்கு சொத்தில் வீடு மற்றும் கட்டிடங்கள் உள்ளது என நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்ட இடம் அமைந்துள்ள அமைவிடம் புதிய சர்வே எண்.90B/1 (பழைய சர்வே எண்.90Bல் உள்ள 5.86 ஏக்கர்நிலத்திற்கு உட்பட்டதாகும். இந்த இடத்திற்கு மாநகராட்சியால் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதும் உண்மையே, ஆனால் வழக்கெழு வினாவில் இருக்கக்கூடிய 30 செண்ட் இடம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 5.86 ஏக்கர் நிலத்தில் கிரையம் பெறப்பட்ட 30செண்ட் இடமாகும். மேற்சொன்ன விபரங்கள் முறையீட்டுதாரரான திரு.ப.கோவிந்தசாமி என்பவருக்கு அன்னாரால் சமர்ப்பிக்கப்பட்ட 20.02.2023ம் நாளிட்ட மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட 27.02.2023ம் நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மற்றும் 03.03.2023ம் நாளிட்ட தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுவிற்கு அளிக்கப்பட்ட தகவல்கள் அடங்கிய 31.03.2023ம் நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தையும் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் கனிவான பரிசீலனைக்கும் பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலே விவரிக்கப்பட்ட முறையீட்டு மனுதாரரால் முறைகேடாக காலிமனை வரிவிதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அதை ரத்து செய்ய கோரியுள்ள அன்னாரது கோரிக்கையை திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள அசல் வழக்கு எண்.199/22ல் ஏற்கனவே உரிமையியல் நீதிமன்ற நீதிபதியின் 05.08.2022ம் நாளிட்ட தீர்ப்பில் உத்தரவிட்டவாறு, வழக்கில் உள்ள சொத்தின் உரிமை குறித்து இறுதி தீர்ப்பு கிடைக்கப்பெற்றவுடன் அதனடிப்படையில்

காலிமனை வரிவிதிப்பை ரத்துசெய்வது மற்றும் புதிய வரிவிதிப்புகள் செய்வது குறித்து முடிவெடுக்கப்படும் என்ற விபரத்தை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அதேபோல் 11.07.2022 அன்று மாநகராட்சியால் விதிக்கப்பட்டுள்ள காலிமனை வரிவிதிப்பானது கீழ்க்கண்ட ஆவணங்களின் அடிப்படையில்

1. வருவாய்த்துறையால் வழங்கப்பட்ட பட்டா எண்.522, நாள் 19.10.2021.
2. பத்திரப்பதிவுத்துறை கிரைய ஆவண எண்.6694/2022 நாள். 21.06.2022
3. பத்திரப்பதிவுத்துறை சொத்து தொடர்பான வில்லங்கச்சான்று நாள் 09.07.2022
4. வருவாய்த்துறையால் வழங்கப்பட்ட பட்டா எண்.5616 நாள் 10.07.2022

அதன் மெய்த்தன்மையை சரிபார்த்த பின்பே அன்றைய அலுவலர்களால் ஒப்புதலளித்து வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தையும் இதில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்ற விபரத்தையும் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 03.07.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 15.06.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் வயது மூப்பின் காரணமாக தனது மகனான திரு. G. ரமேஷ் என்பவரை அவரது சார்பில் விசாரணைக்கு ஆஜராக எழுத்து பூர்வமாக ஒப்புதல் அளித்ததன் பேரில் திரு.G.ரமேஷ் 03.07.2023 அன்றயை விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமுலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:

" திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு தாலுக்கா, நெருப்பெரிச்சல் கிராமம் சர்வே எண்.90B/1ல் நாங்கள் 20 வருடங்களாக அனுபவித்து வரும் இடத்தில் வீடுகள், கோவில் மற்றும் மண்டபம் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்கண்ட வீடு மற்றும் மண்டபத்திற்கு ஏற்கனவே சொத்துவரி, தொழில் வரி மற்றும் குடிநீர் வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட நிலத்தில் 30 செண்ட் இடத்திற்கு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், காலிமனை வரி மாநகராட்சியால் விதிக்கப்பட்டுள்ளது. ஒரே இடத்திற்கு இரண்டு வரி மாநகராட்சியால் விதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாநகராட்சியில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, ஏற்கனவே வரி விதிக்கப்பட்ட இடத்திற்கு இன்னொரு வரியாக காலிமனை வரி மாநகராட்சியால் விதிக்கப்பட்டுள்ளதை இரத்து செய்ய ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த வரி விதிப்பு தொடர்பாக மாநகராட்சியில் Back file மற்றும் காலிமனை வரி தற்காலிக நிறுத்தம் சம்மந்தமாக விவரங்களை மாநகராட்சியால் எனக்கு அளித்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது தந்தை இம்முறைமன்றத்திற்குஅளித்துள்ள 25.05.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

**6) திருப்பூர் மாநகராட்சியின் கண்காணிப்பாளர் மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோர் 03.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :**

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள திருப்பூர் வடக்கு தாலுக்கா, நெருப்பெரிச்சல் கிராமம், சர்வே எண்.90B/1ல் அமைந்துள்ள மனுதாரருக்கு சொந்தமான 5.5 ஏக்கர் இடத்தில் அமைந்துள்ள வீடுகள், மற்றும் மண்டபம் ஆகியவற்றிற்கு முறைப்படி சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் 5.86 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் மனுதாரரின் 5.56 ஏக்கர் இடத்தை தவிர்த்து மற்றொருவரின் பெயரில் அதாவது திரு.சிவசுப்பிரமணியம் என்பவரின் பெயரில் உள்ள பதிவுத்துறை ஆவணங்களின் அடிப்படையில் 30 செண்ட் இடத்திற்குத்தான் காலிமனை வரி விதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தெரிவித்துள்ளவாறு அவரது இடத்தில் 30 செண்ட் இடத்திற்கு வரி ஏதும் விதிக்கப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேற்கண்ட ஆவணங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேலும் மனுதாரரிடமிருந்து புகார் மனு பெற்றவுடன் மேற்கண்ட இடத்தை அளந்திட முற்படும்போது மனுதாரர் தனது இடத்தை அளந்திட மறுப்பு தெரிவித்து வருகிறார் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இம்முறைமன்றத்தில் எங்களால் சமர்ப்பிக்கப்படும் திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் 30.06.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்கள்.

இந்நேர்வில் மனுதாரரின் மனு, அவரது சார்பாக அவரது மகன் அளித்துள்ள வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை அடிப்படையிலும் இந்நிகழ்வில் இம்முறைமன்ற நடுவம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மனுதாரர் தனது மனுவில் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு தாலுக்கா, நெருப்பெரிச்சல் கிராமம் சர்வே எண்.90B/1ல் நாங்கள் 20 வருடங்களாக அனுபவித்து வரும் இடத்தில் வீடுகள், கோவில் மற்றும் மண்டபம் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்கண்ட வீடு மற்றும் மண்டபத்திற்கு ஏற்கனவே சொத்துவரி, தொழில் வரி மற்றும் குடிநீர் வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட நிலத்தில் 30 செண்ட் இடத்திற்கு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், காலிமனை வரி மாநகராட்சியால் விதிக்கப்பட்டுள்ளது. முறைகேடாக வழங்கப்பட்ட காலிமனை வரி ஒப்புதலை ரத்து செய்யவும் அல்லது காலிமனை வரிவிதிப்பினை அசல் வழக்கு முடியும் வரை நிறுத்தி வைக்குமாறு கோரியுள்ளார்.

மாநகராட்சி அலுவலர்கள் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள திருப்பூர் வடக்கு தாலுக்கா, நெருப்பெரிச்சல் கிராமம், சர்வே எண்.90B/1ல் அமைந்துள்ள மனுதாரருக்கு சொந்தமான 5.5 ஏக்கர் இடத்தில் அமைந்துள்ள வீடுகள், மற்றும் மண்டபம் ஆகியவற்றிற்கு முறைப்படி சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் 5.86 ஏக்கர் நிலம் உள்ளது என்றும் அதில் மனுதாரரின் 5.56 ஏக்கர் இடத்தை தவிர்த்து மற்றொருவரின் பெயரில் உள்ள அதாவது திரு.சிவசுப்பிரமணியம் என்பவரின் பெயரில் உள்ள பதிவுத்துறை ஆவணங்களின் அடிப்படையில் 30 செண்ட் இடத்திற்குத்தான் காலிமனை வரி விதிக்கப்பட்டுள்ளது எனவும் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையை திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள அசல் வழக்கு எண்.199/22ல் ஏற்கனவே உரிமையியல் நீதிமன்ற நீதிபதியின் 05.08.2022ம் நாளிட்ட தீர்ப்பில் உத்தரவிட்டவாறு வழக்கில் உள்ள சொத்தின் உரிமை குறித்து இறுதி தீர்ப்பு கிடைக்கப்பெற்றவுடன் அதனடிப்படையில் காலிமனை வரி விதிப்பை ரத்து செய்வது மற்றும் புதிய வரி விதிப்புகள் செய்வது குறித்து முடிவு எடுக்கப்படும் என தெரிவித்துள்ளனர். இந்நிலையில் திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையினை ஏற்று இம்மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாமென கருதி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. B.கோவிந்தசாமி,
த/பெ. லேட். பகவதி கவுண்டர்,
8/3762, 8/3763, PRG திருமண மண்டபம்,
அண்ணா நகர்,
திருப்பூர் – 641 602.

2. ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா.அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

4. இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா.அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்(முகூ.பொ)